இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 13.10.2026

நவநீதம் பிள்ளைக்கு நல்வாழ்த்து!



அமைதிக்கான நோபல் பரிசு நவநீதம் பிள்ளைக்கு கிடைத்திருக்கிறது. அமைதிக்கான நோபல் பரிசு யாருக்குக் கிடைத்தாலும் மகிழ்ச்சிதான். நவநீதம் பிள்ளைக்கு கிடைத் திருப்பது கூடுதல் மகிழ்ச்சிக்குரியது. தமிழ் கூறு நல்லுலகு முழுவதும் பெருமிதத்தால் கொண்டாட வேண்டிய மகிழ்ச்சி ஆகும்.

தமிழினத்தைச் சேர்ந்தவர் நவநீதம்பிள்ளை. தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த தமிழ் வம்சாவளி தமிழச்சி தான் நவநீதம் பிள்ளை. உலகளாவிய ஒரு பரிசு தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்திருப்பதை விட மகிழ்ச்சி வேண்டுமா?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையராக செயல்பட்டவர் நவநீதம் பிள்ளை. அப்பொறுப்பை வகித்த காலத்தில் அமைதிக்காக உண்மை யாக உழைத்ததால் இந்தப் பரிசு அவருக்குத் தேடிப்போய் தரப்பட்டுள்ளது. உலக அமைதி மற்றும் சர்வதேசச் சட்டத்தை மேம்படுத்துவதற்காக மேற் கொண்ட பணிகளைப் பாராட்டி அமைதிக்கான பரிசு அவருக்குத் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் வாழ்ந்த எளிய தமிழ்க்குடும்பத்தில் 1941 ஆம் ஆண்டு பிறந்தவர் நவநீதம் பிள்ளை. நாராயணசாமி - சாந்தம்மாள் இணையருக்கு மொத்தம் எட்டு குழந்தைகள். இவர் ஐந்தாவது. சட்டம் படித்தார். நடால் மாகாணத்தில் வழக்கறி ஞராக தனது பணியைத் தொடங்கினார். உலகப் புரட்சியாளர்களில் ஒருவராகப் போற்றப்படும் நெல்சன் மண்டேலா சிறையில் இருந்தபோது அவரைச் சந்தித்துப் பேசிய பெருமையும் இவருக்கு உண்டு.

நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு 1995 ஆம் ஆண்டு அதிபர் நெல்சன் மண்டேலாவால் நீதிபதியாகவும் இவர் நியமிக்கப்பட்டார். தென்னாப்பிரிக்க உயர்நீதிமன்றத்தில் வெள்ளையர் அல்லாத முதல் பெண் நீதிபதியாக உயர்ந்தார். அத்தோடு மனநிறைவு பெற்றுவிடவில்லை அவர். அங்கிருந்து ஐக்கியநாடுகள் அவைக்கு பணியாற்றச் சென்றார். ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை களுக்கான உயர் ஆணையராக சென்றார். 2008 முதல் 2014 வரை அங்கு பணியாற்றினார்.

2008 காலக்கட்டம் மிகமிக முக்கியமானது. ஈழத்தமிழர் உரிமைப் போராட்டம் நசுக்கப்பட்டு அவர்களது மரண ஓலம் கொடூரக் குண்டுகளால் அமுக்கப்பட்டு தமிழர் தம் மரண ஓலம் உலகம் முழுக்கக் கேட்ட காலம் அது. எவராலும் அடக்க முடியாத ராஜபக்ஷே கும்பலின் ஆணவத்தை யாராவது அடக்க மாட்டார்களா என்று தமிழர்கள் ஏங்கித் தவித்த அந்தக் காலத்தில் ஐ.நா. அவையில் இருந்தார் நவநீதம் பிள்ளை. மனித உரிமை ஆர்வலராக மட்டுமல்ல, தொப்புள் கொடி அறுத்துக் கொள்ளாத தமிழச்சியாக அவர் செயல்பட்டார். முள்ளிவாய்க்கால் பகுதியில் நடந்தது இனப்படுகொலையே எனச் சொல்லி விசாரணை நடத்த உத்தர விட்டவர் நவநீதம் பிள்ளை. போர்க்குற்றமே என்ற தீர்ப்பில் உறுதியாக இருந்தார். சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

போர்க்காலங்களில் நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளும் போர்க்குற்றமே என்றும், இனவெறியைத் தூண்டும் வகையில் எழுதுவதும் போர்க்குற்றமே என்றும் சொன்னவர் இவர்.

போர் முடிந்துவிட்டது என்று இலங்கை அரசு அறிவித்தபோது, போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு நீதி கிடைக்க வேண்டாமா என்ற கேள்வியை சர்வதேச அரங்கில் தொடர்ந்து எழுப்பினார்.

2009ஆம் ஆண்டு மே 26ஆம் தேதி ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அமர்வில் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை முன் வைத்தார் நவநீதம் பிள்ளை. கடுமையான மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று குரல் எழுப்பினார். இதனடிப்படையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு இக்குழுவின் அறிக்கை வெளியானது. அனைத்து மனித உரிமை மீறல்களும் ஐ.நா. குழுவால் உறுதி செய்யப்பட்டது. இக்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று நவநீதம் பிள்ளை வலியுறுத்தினார்.

2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நவநீதம் பிள்ளை இலங்கைக்குச் சென்றார். பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்தார். தமிழ்ச் சமுதாயத்தைச் சந்தித்து உரையாடினார். துணிச்சலாக கொழும்புவில் பேட்டியும் அளித்தார். 2014ஆம் ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதி நவநீதம் பிள்ளை தலைமையிலான ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் இலங்கை தொடர்பான முக்கிய அறிக்கையை வெளியிட்டது. அதே ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விசாரணை நடத்தும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையர் அலுவலகத்துக்கு தரப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகள் மூலமாக இதைத் தடுக்க முயற்சித்தது இலங்கை. ஆனால் அதை மீறி வென்றார் நவநீதம் பிள்ளை.

தமிழர்களுக்காக வாதாடியதற்காக மட்டும் அவரை பெருமையாக நினைக்கவில்லை. உலக மனிதத்துக்காக உழைத்தார் அவர். தென்னாப்பிரிக்க பெண்களுக்கான உரிமை அமைப்பைத் தொடங்கி நடத்தினார். ருவாண்டாவுக் கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக இருந்தார். சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தார். பாலஸ்தீனத்துக்கான ஐ.நா. விசாரணை ஆணையத்தின் தலைவராக இருந்த போது அங்கு நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் துணிச்சலாக அறிக்கை கொடுத்தார். பாலினச் சிறுபான்மையினர் உரிமைகளுக்காக 'Free & Equal' என்ற உலகளாவிய பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

2012 இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை தொடர்பான தீர்மான வாக்கெடுப்பில் இலங்கை அரசை இந்திய அரசு ஆதரிக்கக் கூடாது என்று தலைவர் கலைஞர் அறிக்கை வெளியிட்டார். சென்னையில் தமிழ் ஈழ ஆதரவாளர் கூட்டமைப்பு - டெசோ மாநாடு நடைபெற்றது. 'இலங்கைத் தமிழர்கள், அவர்களது அரசியல் தீர்வை அவர்களே முடிவு செய்யும் உரிமை அவர்களுக்கே வழங்கும் தீர்மானத்தை ஐ.நா. சபையிலும், மனித உரிமை ஆணையத்திலும் கொண்டு வர வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை தலைவர் மு.க.ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் அமெரிக்கா சென்று ஐ.நா. பொதுச் செயலாளர் யான் லியாசன், ஜெனீவா ஐ.நா. மனித உரிமை ஆணையம் தலைவர் நவநீதம் பிள்ளை ஆகியோரிடம் வழங்கினார்கள். வரலாற்றில் பதிவாக வேண்டிய நிகழ்வு இது.

ஈழத்தமிழர்க்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லைதான். என்றாலும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று, இலங்கையில் நடந்தது போர்க்குற்றமே என்பதை ஐ.நா. அவை வரைச் சொல்ல வைத்தவர் நவநீதம் பிள்ளை.

என்றாவது ஒரு நாள் ஈழத்தமிழர்க்கு நீதி கிடைக்கும் போது எழும் மகிழ்ச்சியே அவருக்கு நோபல் பரிசை விட மிகப்பெரிய பரிசாக அமையும்.

நவநீதம் பிள்ளைக்கு நல்வாழ்த்து!

●●

பணி நிரந்தரம் கோரி போராடும்

மருத்துவப் பணியாளர்களை கைது செய்வதா?

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக். 13 - "பணி நிரந்தரம் கோரிப் போராடும் மருத்துவப் பணி யாளர்களை கைது செய்வதா?" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., த.வெ.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பணி நிரந்தரம் செய் யக் கோரி போராட்டம் நடத்திய மருத்துவப் பணியாளர்களைக் காவல்துறை கைது செய்திருப்பது கண்டனத்திற் குரியது.

தேர்தல் நேரத்தில் வாய்க்கு வந்ததை எல் லாம் வாக்குறுதியாகக் கூறி மக்களை ஏமாற்றி விட்டு, இன்று அவற்றை நிறைவேற்றக் கோரி மக்கள் போராடினால் ஒடுக்கு முறையை ஏவி அடக்கிக் கொண்டிருக்கிறது இந்த



அராஜக அரசு.

விவசாயிகள், செவிலி யர்கள், மருத்துவப் பணி யாளர்கள் என இந்த அரசு ஏமாற்றியவர்களின் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகி றது.

கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றாமல், போராடுபவர்களைக் காவல்துறையை வைத்துக் கைது செய்தே காலத்தை ஓட்டிவிடலாம், தேர்தல் நேரத்தில் முகத்தைக் காட்டினால் மட்டும் போதும் என்கிற மிதப் பில் இருக்கிறாரா முதல மைச்சர்?

கைது செய்யப்பட்ட வர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்; அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மூடிய கதவுகளுக்குப்பின் ரகசியமாக நியமிக்கப்படுகின்றனர்!

நீதிபதிகளை நியமிப்பது கொலீஜியம் அல்ல, பிரதமர்தான்!

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு குற்றச்சாட்டு!

புதுடெல்லி,அக்.13 - இந்தியாவில் உயர் நீதிமன் றங்கள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்யும் கொலீஜியம் முறையில் வெளிப் படைத்தன்மை இல்லை என்றும், உண்மையில் இந்த நீதிபதிகள் அனைவரும் பிரதமர் நரேந்திர மோடியால்தான் நேரடியாக நியமிக்கப்படுகிறார்கள் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.சந்துரு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடை பெற்ற கருத்தரங்கம் ஒன் றில் அவர் பேசிய இந்த கருத்துகள் தற்போது நாடு முழுவதும் பெரும் விவா தத்தைக் கிளப்பியுள்ளன.

சென்னையில் உள்ள ஏசியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் (ACJ) கல்வி நிறுவனம் சார்பில், "நீதிப திகளை யார் எடைபோ டுவது?" (Who Will Judge the Judges) என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங் கம் நடைபெற்றது.



நீதிபதிகள் நியமனம், நீதிமன்றங்களின் செயல் பாடு மற்றும் சமூகப் பிர திநிதித் துவம் குறித்து இந்த நிகழ்வில் மூத்த சட்ட வல்லுநர்கள் விரி வாக விவாதித்தனர்.

நிகழ்ச்சியில் முக்கிய உரையாற்றிய ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு, நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய அரசின் மறை முகத் தலையீடுகள் குறித் துப் பேசினார்.

"2014-ஆம் ஆண்டு மத்தி யில் பா.ஜ.க. தலைமை யிலான நரேந்திர மோடி அரசு ஆட்சிக்கு வந்ததும், தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டத்தை கொண்டுவர முயற்சி செய்தது. ஆனால், அந்தச் சட்டம் அரசியல் சாசனத் திற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் அதை ரத்து செய்துவிட்டது.

அந்தத் தீர்ப்பிற்குப் பிறகு, உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அனைவரை யும் கொலீஜியம் தேர்வு செய்வதற்குப் பதிலாக, உண்மையில் பிரதமர் மோடியே நேரடியாக நியமித்து வருகிறார்.

NJAC சட்டத்தை மீண் டும் கொண்டுவர அரசு எந்த முயற்சியும் எடுக்க வில்லை. ஏனெனில், அந்த ஆணையத்தை விட தங்களுக்குச் சாதகமான, அதிக பலன் தரக்கூடிய வேறு குறுக்கு வழிகளை அரசு இப்போது கண்டு பிடித்துவிட்டது" என்று நீதிபதி சந்துரு கூறினார்.

தொடர்ந்து தற்போது நடைமுறையில் இருக்கும் 'கொலீஜியம்' முறையை யும் நீதிபதி சந்துரு கடுமையாக விமர்சித்தார்.

"உச்ச நீதிமன்றத்தில் 38 நீதிபதிகளும், மாநில உயர் நீதிமன்றங் களில் சுமார் 1,000 நீதிபதிகளும் பணியாற்றுகிறார்கள். இவர்களைத் தேர்வு செய் யும் கொலீஜியம் முறைக்கு இந்திய அரசியல் சாசனத் தில் எந்தவிதமான அங்கீ காரமும் கிடையாது. யாருக்குமே எதுவும் தெரியாமல், மூடிய கதவு களுக்குப் பின்னால் ரகசி யமாக இந்த நியமனங்கள் நடக்கின்றன. இந்தியாவி லேயே மிகக் கவனமாகப் பாதுகாக்கப்படும் மிகப் பெரிய ரகசியம் இந்த கொலீஜியம் முறைதான்.

நீதிபதிகளே நீதிபதி களை நியமித்துக் கொள் ளும் ஒரு விசித்திரமான முறை உலகத்தில் வேறு எங்குமே இல்லை. மக்க ளால் தேர்ந்தெடுக்கப் படும் ஜனநாயக நாடுகள் எதிலும் இதுபோன்ற ஒரு பழக்கம் கிடையாது; இந் தியாவில் மட்டும்தான் இது நடக்கிறது" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

பங்கேற்றோர் எச்சரிக்கை!

இதற்கிடையே கொலீ ஜியம் முறையில் யாருக் குப் பதவி வழங்கப்படுகி றது, எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார் கள் என்பது மக்களுக்குத் தெரிவதில்லை.

அதே நேரத்தில், ஒன் றிய அரசு தங்களுக்கு வேண்டியவர்களை மட் டுமே அங்கீகரித்து மற்ற பெயர்களைத் தாமதப் படுத்துகிறது என்ற குற் றச்சாட்டும் நீண்ட நாட் களாக இருந்து வருகிறது.

நீதிபதிகள் நியமனம் நேர்மையாகவும் வெளிப் படையாகவும் நடக்கா விட்டால், அது நாட்டின் ஒட்டுமொத்த நீதி வழங் கல் முறையையே பாதிக் கும் என்பதை இந்தக் கருத்தரங்கில் பேசிய பேச்சாளர்கள் எச்சரித் துள்ளனர்.

மிரட்டல்களுக்கு ஒருபோதும் அஞ்ச மாட்டோம்:

சர்வாதிகாரத்தின் முடிவு தொடங்கிவிட்டது!

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நிறுவனர் அபிஜீத் திப்கே கண்டனம்!



புதுடெல்லி, அக்.13 - வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி களில் முறைகேடு செய்த தாக குற்றம் சாட்டி தலைமை தேர்தல் கமிஷ னர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி கரப் பான் பூச்சி ஜனதா கட்சி யினர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 2-ந் தேதி காந்தி ஜெயந்தி அன்று மும்பையில் அவர் கள் போராட்டம் நடத்தி னார்கள். ஏற்கனவே தங்க ளது போராட்டத்தால் மத்திய கல்வி மந்திரியை பதவி விலக வைத்த செயல், அவர்களை இந்த போராட்டத்துக்கு மேலும் ஊக்கப்படுத்தியது.

இதனால் அக் 10-ந்தேதி டெல்லியில் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடைபெறும் என அறி வித்து இருந்தனர். போராட்டத்தை முறி யடிப்பதற்காக போலீசார் டெல்லியில் பல்வேறு கட் டுப்பாடுகளை அறிவித்த னர். முதலாவதாக கரப் பான் பூச்சி கட்சியினரின் போராட்டத்துக்கு அனு மதி மறுக்கப்பட்டது.

இதற்கிடையே மும்பை யில் இருந்து இந்த போராட்டத்துக்காக புறப் பட்ட கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் நிறுவ னர் அபிஜீத் திப்கே, பிற நிர்வாகிகள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகி யோர் டெல்லி விமான நிலையத்துக்கு நேற்று காலை 10:30 மணி அள வில் வந்தனர்.

இதனை முன்கூட்டியே அறிந்திருந்த போலீசார் அந்த விமானத்துக்குள்ளேயே ஏறி அவர்களை கைது செய்தனர்.

இந்நிலையில், டெல்லி யின் கண்டோன்மென்ட் காவல் நிலையத்தில் சிஜேபி தலைவர்களான அபிஜீத் தீப்கே, அசுதோஷ் ரங்கா மற்றும் சௌரவ் தாஸ் ஆகியோர் நீதிபதி முன் நேற்று ஆஜர்படுத்தப் பட்டனர். அவர்கள் 3 பேரை விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். ஓராண்டு காலம் அமைதிக்கு இடை யூறு செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்ப டையில் அவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளனர்.


இதனை தொடர்ந்து சர்வதிகாரத்தின் முடிவு தொடங்கிவிட்டது என அபிஜீத் திப்கே கூறியுள் ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தள பதிவில்,

மோடி பிரதமராக இருப்பது இந்தியாவுக்கு அவமானம். நாட்டில் இது வரை இவ்வளவு பெரிய கோழையையும், அதிகா ரத்தைப் பயன்படுத்தி மிரட்டுபவரையும் பார்த் ததில்லை. "இந்தத் துயர மான நேரத்தில் எனது கு டு ம் ப த் தி ன ரு ட ன் இருக்க எனது சொந்த கிராமத்துக்குத் திரும்பிச் செல்கிறேன். டெல்லியில் சவுரவ் மற்றும் ஆஷு ஆகி யோர் விரைவில் செய்தி யாளர் சந்திப்பை நடத்து வார்கள்.

சிஜேபி அமைப்பு ஒரு போதும் பின்வாங்காது. மி ர ட் ட ல் க ளு க் கு ம் அஞ்சாது. அக்டோபர் 10-ம் தேதி, இந்தச் சர்வாதி காரத்தின் முடிவுக்கான தொடக்கமாக வரலாற்றில் இடம்பெறும் என அதில் பதிவிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; ராகுல்காந்தி பங்கேற்ற கூட்டத்திலே; 'த.வெ.க... த.வெ.க.'ன்னும், பிரதமர் மோடி பங்கேற்ற பொது நிகழ்ச்சியிலே, 'அடுத்த பிரதமர் விஜய்ன்னு பதாகை ஏந்தியும்' இருந்தாங்கன்னு படிச்சேன். இது நல்லாவா இருக்கு.

போண்டி : **ஆமாய்யா, 'டீசன்சியா' கட்சி நடத்தாத வங்களோட தொண்டர்கள் அப்படித்தானே இருப்பாங்க. அதை விட்டுத் தள்ளு, இந்த காங்கிரஸ்காரர்களையும், பா.ஜ.க. வினரையும் நினைச்சா தான் பாவமா இருக்கு.**